JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **82/2016** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 8** | Prosecution /Defence / Court | |
| Name | **V.V. சிவக்குமார் (Inspector)** | Village | வீரபாண்டி காவல் நிலையம், தேனி மாவட்டம் |
| Father's Name | வீரமலை | Taluk | |
| | | Age | |

**A**1, **A**2 **absent**. **U/s**. 317 **Cr**.**P**.**C petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் தற்போது தேனி மாவட்டத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பெருந்துறை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 16.06.2016 ம் தேதி ஆலிஸ், த/பெ. லேட். பொன்னையன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணராஜ் அவர்கள் பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 323/2016 சட்டபிரிவு 392 இ.த.ச. பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **வாதி ஆலிஸ் கொடுத்த புகார் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் நகலையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து விட்டு பின்னர் எனது புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை என் வசம் ஒப்படைத்தார்.

2) பின்னர் 16.06.2016 ம் தேதி இரவு 7.30 மணிக்கு சம்பவ இடமான துடுப்பதி ரோடு, சிலேட்டர்புரம் , பெருந்துறை சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகள் மகேந்திரன் மற்றும் நாகராஜ் ஆகியேர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சம்பவ இட சாட்சிகள் இருவரிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் சாட்சிகள் ஆலிஸ், ரேவதி, அலிமா, முகமது அலி, மகேந்திரன் மற்றும் நாகராஜ் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன்.

3. 19.08.2016 ம் தேதி இவ்வழக்கு சம்பந்தமா பெருந்துறை – குன்னத்தூர் ரோட்டில் துடுப்பதி பிரிவு அருகே வாகன தணிக்கையில் இருந்த போது அதிவேகமாக வந்த TN 33 AX 1948 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை நிறுத்தி தணிக்கை செய்து அதில் வந்தவர்களை விசாரணை செய்ய அவர்கள் வாகனத்தை ஓட்டி வந்தவர் டாட்டா பிரபு என்றும், பின்னால் அமர்ந்து வந்தவர் தனசேகர் என்ற தண்டபானி என்றும் கூறியவர்கள் இந்த வழக்கில் சம்பந்தப்பட் எதிரிகள் என்று ஒப்புக் கொண்டவர்களை 15.00 மணிக்கு கைதுக்கான காரணங்களை கூறி கைது செய்தும், அருகில் இருந்த சாட்சிகள் சிவசண்முகம் மற்றும் சங்கர் என்பவர்கள் முன்னிலையில் எதிரி டாட்டா பிரபு என்பவரை விசாரணை செய்ய அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கொண்ட சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். மேற்படி நபர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்கள் ஆஜர் செய்த TN 33 AX 1948 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை மேற்கொண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் 2 ம் எதிரி தனசேகர் என்கிற தண்டபானியை விசாரணை செய்து அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கொண்ட சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். மேற்படி நபர்கள் கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் தோப்புபாளையத்தில் அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 2 பவுன் எடையுள்ள தங்க செயின் ஒன்றினை 18.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியானவர் தன்னை அழைத்துச் சென்றால் தன் வீட்டில் மறைத்து வைத்துள்ள 2 பவுன் நகையை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். **(ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா. 5 மூலமாக அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)**

5. 19.06.2016 ம் தேதி வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் சிவசங்கர் மற்றும் சண்முகம் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். இவ்வழக்கின் புகார்தாரர் ஆலிஸ் மற்றும் ரேவதி ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். காவல் நிலையத்தில் இருந்த எதிரிகளை புகார்தாரர் ஆலிஸ் மற்றும் சாட்சி ரேவதி அடையாளம் காட்டினார். தன்னுடைய நகைகளையும் அடையாளம் காட்டினார். பின்னர் எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். 2 **பவுன் எடையுள்ள தங்க செயின் பாரம் 91 அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 22.08.2016 ம் தேதி என்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரிகள் 2 பேர் மீதும் சட்டபிரிவு 392 இ.த.ச. ஆகிய பிரிவுகளில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.ஆ.1 புகார் யாரால் எழுதப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். முதல் தகவல் அறிக்கையில் களவு சொத்தின் மதிப்பு ரூ. 20,000 என்று கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரருக்கு காயங்கள் இருந்ததாக எதுவும் குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். களவு போன சொத்துக்களின் சிறப்பு அடையாளம் எதுவும் புகாரிலும் என்னுடைய விசாரணையிலும் புகார்தாரர் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லக்கூடிய வாகனத்தில் சிறப்பு அடையாளம் பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் யாரும்

எதிரிகளின் அங்க அடையாளம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் பார்த்தால் அடையாளம் தெரியும் என்று சொல்லி உள்ளார்கள். மறுவாக்கு மூலத்தில் எதிரிகளை மற்றும் களவு சொத்தை அடையாளம் காட்டிய நேரம் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான்.

2. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல எதிரிகளிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரி அல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை